ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2394/07 - 2024 ජූලි මස 22 වැනි සඳුදා - 2024.07.22

*2394/07 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்**

53 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும்-

(அ) அமைச்சரவை, 2024 யூலை 09 ஆந் திகதிய 24/1314/631/033 ஆம் இலக்க அதன் தீர்மானத்தின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட நபரின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த - தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகள் வியாபாரமொன்றாக குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும்;

(ஆ) அத்தகைய வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த-தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகள் வியாபாரமொன்றாக கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும்;

(இ) சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு மேம்பாட்டு அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 19.*

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த - தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகளாக குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றிய விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1 | அதிகாரமளிக்கப்பட்ட நபரின் பெயர் | போர்ட் சிட்டி டியூட்டி ஃப்ரீ (பிரைவேட்) லிமிடெட்<br>(PORT CITY DUTY FREE (PVT) LTD) |
| 2 | உரிம இல. | 2303030004 |
| 3 | உரிமம் வழங்கப்பட்ட திகதி | 2023 ஏப்பிறல் 27<br>வியாபாரம் ஆரம்பிக்கின்ற திகதி உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாதங்களுக்குள் இருக்க வேண்டும் (2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அதிகாரமளிக்கப்பட்ட நபர்களின் பதிவு செய்தல், உரிமம் வழங்குதல், அதிகாரமளித்தல் மற்றும் ஏனைய அங்கீகாரங்கள் என்பவற்றிற்காக ஒழுங்குவிதிகளின் 27 ஆம் ஒழுங்குவிதியைப் பார்க்கவும்). |
| 4 | கரைகடந்த கம்பனி பதிவில. | PCC00273867 |
| 5 | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் - தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகள். |
| 6 | விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான உரித்துடைமை | PORT CITY DUTY FREE (PVT) LTD ஆனது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த -தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகள் வியாபாரமொன்றாக மாத்திரமே நியமிக்கப்பட்டுள்ளது எனவும்; செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த - தீர்வையற்ற சில்லறை தொழிற்பாடுகள் வியாபாரமாக அல்லது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை அல்லது முதன்மை வியாபாரமாக நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறமாட்டாது. |
| 7 | தகவுடைமைக் கட்டளைகள் | 2024, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 2381/24 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள் - தீர்வையற்ற தொழிற்பாடுகளுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிகள்) ஒழுங்குவிதிகளின் 2(4)(அ) மற்றும் (ஆ), என்னும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள். |
| 8 | ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம். | 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்கள் - தீர்வையற்ற தொழிற்பாடுகளுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிகள்) ஒழுங்குவிதிகளின் 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம். |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரம் - தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகளாக கருதுவதற்கான நியாயமானதன்மை**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் பிரிவு 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், அச்சட்டத்தின் பிரிவு 53 (5) இல் கூறப்பட்டுள்ளவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, கொழும்புத் துறைமுக நகரத்தை ஸ்தாபிப்பதன் வெற்றியை உறுதி செய்வதற்காக வியாபாரங்களை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த - தீர்வையற்ற கடைத்தொகுதி தொழிற்பாடுகள் வியாபாரமாக நியமிப்பதில் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

PORT CITY DUTY FREE (PVT) LTD என்பது CHEC Port City Colombo (Private) Limited நிறுவனத்தின் முழுச் சொந்தமான துணை நிறுவனமாகும், அதன் தாய் நிறுவனமான China Communications and Constructions (CCCC) நிறுவனம் குளோபல் பார்ச்சூன் 500 நிறுவனங்களின் பட்டியலில் 63 வது இடத்திற்கு தரப்படுத்தப்பட்டுள்ளது. PORT CITY DUTY FREE (PVT) LTD நிறுவனம் கொழும்புத் துறைமுகத்தில் 7000 சதுர மீற்றர் சில்லறை விற்பனை இடத்தை உள்ளடக்கிய தீர்வையற்ற கடைத்தொகுதி இயக்குனராக இருக்கும் மற்றும் 7 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய உத்தேசித்துள்ளது. PORT CITY DUTY FREE (PVT) LTD கடைத்தொகுதியானது பல தீர்வையற்ற சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் ஏனைய சில்லறை விற்பனையாளர்களைக் கொண்டிருக்கும், இதன் மூலம் இந்தியா மற்றும் சீனாவில் இருந்து இலக்கு வைக்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளுக்கு தீர்வையற்ற கடைத்தொகுதி ஒரு கவர்ச்சிகரமான இடமாக இருப்பதை உறுதிசெய்து, கொழும்பை ஒரு சுற்றுலா கொள்வனவுத் தலமாக மாற்றுகிறது.

தீர்வையற்ற கடைத்தொகுதியானது தீர்வையற்ற பகுதிக்குள் அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர் நுழைகின்ற போது வாடிக்கையாளர் சரிபார்ப்பு முறையைக் கொண்டுள்ளது, என்பதோடு இது குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் மூலம் தடையின்றி சரிபார்க்கப்படுகிறது, இதன் அதிநவீன வாடிக்கையாளர் சரிபார்ப்பு முறையானது இலங்கை சுங்கம் மற்றும் கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவிற்கு நிகழ்நேர விற்பனை மற்றும் சரக்கு தரவுகளை வழங்குகிறது.

கொழும்புத் துறைமுக நகரத்தில் உள்ள கொழும்பு சர்வதேச நிதி நிலையத்தில் அதன் நிரந்தர இடத்திற்கு மீண்டும் நிலைநிறுத்தப்படும் போது, 25,000 சதுர மீற்றருக்கு தீர்வையற்ற தொகுதிக்கடை விரிவுபடுத்தப்படும். சில்லறை விற்பனை தளத்தில் மேலும் முதலீடு மற்றும் மேம்பட்ட வேலைவாய்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்**

| சட்டத்தின் அட்டவணை ***II*** இன் கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள் | வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் |
|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம். | அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்;<br><br>ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட நிறுத்திவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |

| **அட்டவணை IV** *(தொடர்ச்சி)* | |
|---|---|
| *சட்டத்தின் அட்டவணை **II** இன் கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்* |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம். | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியிலான பண்டங்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம். | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம். | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம். | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியிலான பண்டங்களின் சகல இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம். | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியிலான பண்டங்கள் மற்றும் சேவைகளின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம். | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியிலான பண்டங்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம். | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு வியாபார ரீதியிலான பண்டங்களின் சகல இறக்குமதிகளும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்ட சகல வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம். | இச்சட்டத்தின் கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம். | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம். | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலாவணிச் சட்டம். | 2022, யூன் 03 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அந்நியச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் சகல ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம். | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை IV**
**வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளின் செல்லுபடியாகும் காலப்பகுதி**

| *சட்டத்தின் அட்டவணை **II** இன் கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள்* | *தொடங்கும் திகதி* | *முடிவுறும் திகதி* |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, பெறுமதிசேர் வரிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, மதுவரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி வரிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம். | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழில் முடிவுறுத்தல் (விசேட ஏற்பாடுகள்) சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம். | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலாவணிச் சட்டம். | 2024 யூலை 19 | 2024 யூலை 18 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குவிதி) சட்டம். | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 07-0201

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.